செ.வெ. எண்: 275 நாள்: 01–05–2012

# செய்தி அறிக்கை

30.04.2012 அன்று காலை மாண்புமிகு என்.ஆர்.சிவபதி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மற்றும் திருமதி.டி.சபிதா, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித்துறை முதன்மை செயலாளர் அவர்கள் நுங்கம்பாக்கம், கல்லூரிச்சாலையில் உள்ள தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திற்கு வருகை புரிந்தனர். அவர்களை தமிழ்நாட்டுப் பாடநூல் கழக மேலாண்மை இயக்குநர், திரு கே.கோபால், இ.ஆ.ப., மற்றும் டாக்டர் ஆர்.இளங்கோவன், செயலாளர் (பொ) அவர்கள் வரவேற்றனர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திலுள்ள பாடநூல் விற்பனை மையங்களை பார்வையிட்டு அங்கிருந்த பொதுமக்களிடம் பாடநூல் விற்பனை குறித்து விசாரித்தனர்.

குறித்த காலத்தில் பாடநூல்களின் விற்பனைளை தொடங்கிய தமிழ்நாட்டுப் பாடநூல் கழக மேலாண்மை இயக்குநர் அவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள்.

செயலர்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.